**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 191 -2025**

| | | | | |
|---|---|---|---|---|
| Deposition of LW2 | | | Examined as : PW 2 | |
| Name | : ஸ்டாலின் | | Defence | : |
| Father's Husband's Name | : மதிவாணன் | | Court | : |
| Village | : கீழத்தெரு, படுகை | | Taluk | : தரங்கம்பாடி |
| Calling | : | | | |
| Age | : 25/2026 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 19.06.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அசா.1 ஐ தெரியும். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு நானும் எனது நண்பரும் BSNL Tower அருகே நின்று பேசிக்கொண்டிருந்தபோது சுமார் 20, 30 நபர்கள் கூட்டமாக இருந்தார்கள். அப்போது அவர்களுக்குள் நடந்த சண்டையில் பக்கத்தில் இருந்த எனக்கும் ராகுலுக்கும் காயம் ஏற்பட்டது. அதனால் அந்த கூட்டத்தில் ஆஜர் எதிரிகளும் இருந்ததால் அவர்கள் தான் என்னையும் என் நண்பனையும் தாக்கி இருப்பார்கள் என்ற சந்தேகத்தில் ராகுல் புகார் கொடுத்துவிட்டார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரித்து சாட்சியம் அளிக்காததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–

ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். தற்சமயம் எதிரிகளுடன் சமாதனமாகி கையொப்பம் செய்துள்ளேன். சமாதன மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது யாருடைய வற்புறுத்தலோ தூண்டுதலோ இன்றி

தன்னிச்சையாக சமாதானம் செய்துகொண்டேன் என்றால் சரிதான். கடந்த 20.04.2024 அன்று மதியம் 3 மணியளவில் ராகுல், சரபோஜி ஆகியோருடன் நானும் சேர்ந்து அவிழிக்கரை BSNL Cell tower அருகே பேசிக்கொண்டிருந்தபோது ரோஹித், முத்து, நேதாஜி, வசந்த ஆகிய 4 பேரும் எங்களைப் பார்த்து குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே பா.ம.க விற்கு ஓட்டு போட சொன்னால் போடமாட்டியா தேவடியா பயலே என அசிங்கமான வார்த்தைகளால் என்னை திட்டி கையில் வைத்திருந்த பீர் பாட்டிலால் கீழே போட்டு உடைத்து ராகுல் தலையில் அடித்து முதுகிலும் குத்தினார்கள் என்றால் சரியல்ல. அதை தடுக்க சென்ற என்னை முத்து, நேதாஜி, வசந்த் 3 பேரும்சேர்ந்து கீழே கிடந்த கட்டையால் என்னை மாறி மாறி அடித்தார்கள் என்றால் சரியல்ல. ஊர்க்காரர்கள் வருவதைப்பார்த்து அவர்கள் எங்களிடம் வைத்துக்கொண்டால் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார்கள் . மேற்கண்ட சங்கதிகளை அரசு மருத்துவனை சிகிச்சையில் இருந்த போது போலீசாரிடம் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானம் செய்துக்கொண்டு அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**